# விவிலிய வினாடி வினா
## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசாரியா- சென்னை, லூதியா மேரி, வீர்ஜின், வில்சன் மேரி, ஜோஸ்பிட்டா மேரி- திருச்சி, ஜெரின் மேரி, ஸ்டெல்லா ரோஸ் - திண்டுக்கல், பவுலின் மேரி, அனன்சியா மேரி, டோம்னா மேரி, ஜார்லத் புஷ்பா, லூக்காஸ் மேரி, டோனெட்டல்லா அனஸ்த்தாசியாள், பிலோமினாள் - கும்பகோணம் மேரி மௌரிஸ்,- தஞ்சாவூர், ரூபெல்லா மேரி - திருநெல்வேலி, ஜான்சி மேரி, விமல் மேரி - மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - கரூர், ஆக்னஸ் ரோசாள், லோரா மேரி, - தூத்துக்குடி, சகாயம்-கடலூர், புஷ்பாமேரி-சிவகங்கை, ஜெயசேகரி-கொடைக்கானல்.

**பொதுநிலையினர்**

பிரான்சிஸ் பேசில், மேரி மார்கரேட், ஆனி பீட்டர் ராஜ், அனிருத் ஜோஸ்வா, கிளாரா லூர்து மேரி, லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா, ஜெகத்ரட்சகன் ஜோசப், சந்தனம், ஜான் ஜோசப், பாத்திமா, நான்சி பியூலா, செலின் மேரி - திருச்சி; லீலாவதி, அமல செல்வி, இருதய விஜிலா - திண்டுக்கல், ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மிக்கேல்சாமி, புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர், இம்மாக்குலேட்,கனிஷியஸ் விஷால், ஜெயராஜ் - சென்னை, ஜோஸ்பின் சகாய ராணி-கும்பகோணம், சிப்ரியன்-தெளி, மரிய பிரகாசம்-தர்மபுரி.

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



**அருட்சகோதரி. ஜெயசேகரி - கொடைக்கானல்**
**அருட்சகோதரி. விமல் மேரி - மதுரை**
**திருமதி. மரிய பிரகாசம் - தர்மபுரி**
**திருமதி. ஜெயராஜ் - சென்னை**

**Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.**
**Editor: Fr. R.M. UGIN WINNER OSM.**








# மனமாற்றம்
## பதிப்பாசிரியர் பக்கம்


ரு.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச

ஆகட்டும் இதழின் வாசகர்களே அன்னை மரியின் பக்தர்களே மீட்பின் வரலாற்றில் இறைவாக்கினர்கள் முதல் திருமுழுக்கு யோவான் வரை ஏன் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம் அன்னை மரியாள் கூட தொடர்ந்து வலியுறுத்தி வருவது இந்த மனமாற்றத்தைதான். இன்றும்கூட அன்னை மரியாள் எங்கெல்லாம் மக்களுக்கு காட்சிக் கொடுக்கின்றாரோ அங்கெல்லாம் மனமாற்றத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவதை நம்மால் பார்க்க முடியும்.

இந்த மனமாற்றம் என்பது அன்னை மரியாளின் வாழ்க்கையில் அவரின் விண்ணேர்ப்புக்குப் பின்னால் உருவானது ஒன்றும் கிடையாது. மாறாக அன்னை மரியாள் என்று கபிரியேல் வானதூதருக்கு ஆம் என்று பதில் கூறினாரோ அன்றுமுதல் இது ஆரம்பம் ஆகிறது. அந்த மனமாற்றம் அன்னை மரியாளின் வாழ்க்கையில் எங்கிருந்து ஆரம்பம் ஆனது என்றால் அவரின் வாழ்க்கையில் இருந்துதான். எப்பொழுது கபிரியேல் தூதர் அன்னை மரியாளிடம் நீ கருவுற்று ஒரு மகனை பெற்றெடுப்பாய் அவருக்கு இயேசு என்று பெயரிடுவாய் என்று கூறினார் அதற்கு அன்னையும் அது எவ்வாறு நிகழும் நான்தான் கன்னி ஆயிற்றே என்ற கேள்வியினை எழுப்பினாலும் அன்னை மரியாள் மனமாற்றம் அடைந்தார், இறைவனின் திட்டத்திற்கு இல்லை என்று பதிலளிக்க நான் யார் என்று இறைவனின் திட்டத்திற்கு இதோ ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழட்டும் என்று மனமாற்ற விதையை தன்னில் விதைக்கின்றார்.



## உள்ளே



கதையினில் கலந்த மரியா - 05
எதிர்நோக்கின் அன்னை மரியா - 06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
போற்றுதலுக்கு உரிய அன்னை - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மாதா மன்றாட்டு மாலை - 25
பொதுநிலையினரின் பார்வையில் மரியா - 28
லூர்து நகர் காட்சிகள் - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

தன்மீது மனமாற்றம் என்னும் விதையை விதைத்த அன்னை பின்னர் அந்த விதையை பிறரிடமும் விதைக்கின்றார் முதலில் தன் ஒரே மகனில் விதைக்கின்றார். அது எங்கு நிகழ்ந்தது என்றால் கானாவூர் திருமண விழாவில் நடைபெறுகின்றது. அன்னை மரியாளும் ஆண்டவர் இயேசுவும் அவருடைய சீடர்களும் அந்த திருமண விழாவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். திருமண விருந்தில் திராட்சை இரசம் தீர்ந்துபோனது. இதனை அறிந்த அன்னை மரியாள் அந்த குடும்பத்தின்மீது இரக்கம் கொள்கிறார். தங்களை திருமண விருந்திற்கு அழைத்த குடும்பம் சங்கடத்தில் இருப்பதை அவர் விரும்பவில்லை. இந்த குடும்பத்திற்கு எப்படியாவது உதவ வேண்டும் என்று தன் மகனிடம் செல்கின்றார். திருமண வீட்டில் திராட்சை இரசம் தீர்ந்து விட்டது என்று சொன்னதும் இயேசு சொன்ன வார்த்தைகள் அன்னை மரியாளை ஏமாற்றம் அடைய செய்தது. அம்மா அதற்கு நாம் என்ன செய்ய முடியும். அன்னை நம்பினாள் தன் மகன் நிச்சயம் மனமாறுவான் என்று. அவரும் மனமாற்றம் அடைகின்றார் தன்னுடைய முதல் அரும் அடையாளத்தை ஆண்டவர் இயேசு இங்கே செய்து காட்டுகின்றார்.

இந்த மனமாற்றத்தை அன்னை மரியாள் ஒன்றும் தன் மகனோடு மட்டும் நிறுத்தவில்லை, தொடர்கிறார் தன் மகனின் சீடர்களிடம் அன்னை மரியாள் அந்த மனமாற்றத்தை தொடர்கிறார். ஆண்டவர் இயேசுவின் இறப்பு அவரின் சீடர்களை நிலைகுலைய செய்தது. அவர்கள் எதிர்பார்த்தது இயேசு ரோமை அரசுக்கு எதிராக கலகம் செய்து ரோமை அரசை கவிழ்த்து ஆட்சிக்கட்டிலில் அமர்வார் என்று. ஆனால் இயேசுவோ கொலை செய்யப்பட்டிருக்கிறார். இயேசுவோடு இருந்த காரணத்தினால் தாங்களும் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் கொலை செய்யப்படலாம் என்று சீடர்கள் அஞ்சி வாழ்ந்து வந்த நேரத்தில் அவர்களுக்கு கொஞ்சம் தெம்பளித்தது எதுவென்றால் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புதான். இருந்தும் அவர்களை மீண்டும் ஒன்றிணைப்பது மிகப்பெரிய சவாலாக இருக்கும்போது அன்னை மரியாள் அத்தனை சீடர்களிடமும் மனமாற்றத்தை ஏற்படுத்தி அத்தனை பேரையும் ஒன்றாக வரவைத்து தூய ஆவி என்னும் கொடைய அவர்கள் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ளக் காரணகர்த்தவாக இருந்தார். அந்த அன்னை தன்னுடைய பணியை அதோடு நிறுத்திக் கொண்டாரா என்றால் கிடையாது. தொடர்ந்து தன்னுடைய பணியை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றார். இன்றும் அன்னை மரியாள் எங்கெல்லாம் காட்சிக் கொடுக்கின்றாரோ அங்கெல்லாம் தொடர்ந்து மனமாற்றம் என்னும் விதையை விதைத்துக் கொண்டுதான் இருக்கின்றார்.

அன்னை மரியாள் பாத்திமா நகரில் மூன்று சிறு குழந்தைகளுக்கு காட்சிக் கொடுக்கும்போது சொன்னது பாவிகளின் மனமாற்றத்திற்காக ஜெபியுங்கள் அதுபோல் இதே அன்னை லூர்து நகரில் பெர்னதெத் என்ற சிறுமிக்கு காட்சிக் கொடுக்கும்போதும் பாவிகளின் மனமாற்றத்திற்காக ஜெபியுங்கள் என்று கூறியிருக்கின்றார். இன்று நம் அன்னை நம் ஒவ்வொருவரையும் பார்த்து சொல்கின்ற வார்த்தை மனமாறுங்கள். உங்கள் தீய வாழ்க்கையை விட்டுவிட்டு தூய வாழ்க்கை வாழ மனமாறுங்கள். நீங்கள் மட்டும் மனமாறினால் போதுமா இல்லை உங்களை சுற்றியிருப்பவர்களும் மனமாற வேண்டும் அதற்கு பிறரின் மனமாற்றத்திற்காக ஜெபிக்க நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

**மனமாற்றம் பிறரிடமிருந்து அல்ல**
**நம்மிடமிருந்து முதலில் தொடங்கட்டும்**





**சாசரி நகர் - ஆரோக்கிய மாதா பங்கு**

எனக்கு திருமணம் முடிந்து ஒரு வருடமாக குழந்தை இல்லை. முதல் மாதம் வந்து ஜெபித்து விட்டு சென்று விட்டேன். டிசம்பர் மாதம் திருவிழா நடந்து கொண்டிருக்க மாதாவை நம்பி வந்தேன். மாதா எனக்கு இரண்டு குழந்தைகளை கொடுத்திருக்கிறார்கள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சலோமி – தண்டையார்பேட்டை**

எனக்கு திருமணமாகி ஒரு வருடமாக குழந்தை இல்லை. மாதாவிடம் வந்து ஜெபித்தோம். எனக்கு தைராய்டு இருந்தது. பின்பு அருட்தந்தையிடம் சொல்லி ஜெபித்தோம். அடுத்த முறை வரும்போது தைராய்டு சரியாகிவிட்டது நானும் கருவுற்று இருந்தேன். பின்பு 3 மாதம் இரத்தப் போக்கு இருந்தது. மாதாவிடம் ஜெபித்தேன். குழந்தை நல்ல முறையில் இருக்கின்றது. இப்போது குழந்தைக்கு 2 வயது ஆகிறது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

எனக்கு திருமணமாகி ஒரு குழந்தை இருக்கிறது. இன்னொரு குழந்தைக்காக ஜெபித்தேன். அதே மாதம் குழந்தை வரம் பெற்றேன். எனக்கு நிறைய உடல்நிலை குறைபாடு என்று மருத்துவர்கள் சொன்னார்கள். மரியாவின்மீது நம்பிக்கை வைத்தேன். இப்போது குழந்தை நன்றாக இருக்கிறது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்**

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.

1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்சகோ. டேவிட் ஸ்டேன்லி மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

ஜூன் மாதம் 1 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**பொ்னதெத் மேரி – மேட்டுகுப்பம்**

என் கணவருக்கு 13 ஆண்டுகளாக நீதிமன்றத்தில் வழக்கு இருந்தது. ஜீவமாதாவிடம் தொடர்ந்து இரண்டு மாதம் ஜெபித்தேன். மாதாவின் துணையால் அந்த வழக்கு முடிந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஐயனாவரம்**

எனது மருமகளுக்கு குழந்தையில்லாமல் இருந்தது. ஒரு ஆட்டோ ஓட்டுநர் ஜீவ மாதாவைப் பற்றி சொன்னார். தொடர்ந்து இரண்டு மாதம் இந்த ஆலயத்திற்கு வந்து ஜெபித்தோம். இப்போது என் மருமகளுக்கு இது 3-ம் மாதம். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சோழிங்கநல்லூர்**

என்னுடைய குழந்தைக்கு அடிக்கடி வாந்தி வந்து கொண்டிருந்தது. அதுவும் சிலநேரம் வாந்தியோடு இரத்தமும் வந்து கொண்டிருந்தது. குழந்தை விரைவில் குணம் அடைய வேண்டி ஜெபித்தோம். குழந்தையும் விரைவில் குணம் பெற்றார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜூடி செல்வா – மதுரவாயல்**

என் அக்காவிற்கு விரைவில் திருமணம் ஆக வேண்டும் என்று ஜீவ மாதாவிடம் ஜெபித்தேன். மேலும் குழந்தை வரமும் வேண்டும் என்று ஜெபித்தேன். இப்போது என் அக்காவோடும் அவர் குழந்தையோடும் வந்திருக்கிறோம். நான் ஜெபிக்கும்போது ஒரு கல்லூரி மாணவியாக இருந்தேன். இன்று ஒரு வழக்கறிஞராக வந்து இருக்கிறேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



## ஞானத்தின் இருப்பிடம்

ஒரு இளைஞன் ஞானம் அடைய வேண்டும் என்று விரும்பினான். ஆகவே பல குருக்களிடம் சென்று பயிற்சி பெற்றான். ஆனால் அவன் நினைத்த இலக்கை அடைய முடியவில்லை. மிகவும் சோர்ந்து போன இளைஞன் இறுதியாக ஒரு குருவை சந்திக்க சென்றான். குரு மிகவும் இன்முகத்தோடு வரவேற்றார். தேனீர் அருந்திக் கொண்டே பேசலாம் என்று சாப்பாட்டு அறைக்கு அழைத்துச் சென்றார். பேசிக் கொண்டே தேனீரை ஒரு குவளையில் ஊற்றினார், சூடான தேனீர் குவளையிலிருந்து நிரம்பி வழிந்து ஓடஓட ஊற்றினார். குருவே கவனியுங்கள், நிரம்பி வழிகிறது என்று கத்தினான் இளைஞன். அதற்கு குரு ஆம் தேனீர் நிரம்பிய குவளையில் மேலும் ஊற்றினால் அது வீணாக வழிந்தோடும், அதுபோலதான் உன்னுடைய மனதும் இதயமும் முழுவதும் பல உலக காரியங்களால் நிரம்பி இருக்கிறது. உன்னுடைய இதயத்தை காலியான பாத்திரமாக வைத்திருந்தால்தான் ஞானத்தால் இதயத்தை நிரப்ப முடியும் என்றார்.

நீதிமொழிகள் 9:1 ஞானம் தனக்கு ஒரு வீட்டைக் கட்டியிருக்கின்றது, அதற்கென ஏழு தூண்களை செதுக்கியிருக்கின்றது. மரியாளை ஞானத்தின் இருப்பிடம் என்று அழைக்கின்றோம். ஞானம் அன்னை மரியாவில் குடிகொண்டிருக்கின்றது. 1கொரி 1:24. கிறிஸ்து கடவுளின் வல்லமையும் ஞானமுமாய் இருக்கிறார். கடவுளின் ஞானம் கிறிஸ்து. மரியாள் இயேசுவை பெற்றெடுத்ததால் ஞானத்தின் இருப்பிடமாக அழைக்கப்படுகின்றார். கபிரியேல் வானதூதர் இயேசுவின் பிறப்பை பற்றி அறிவித்தபோது திறந்த இதயத்தோடு அதை உள்வாங்கி மனதில் இருத்தி தியானித்தார். ஆகவேதான் ஞானம் அன்னை மரியாவில் குடிகொண்டது. நாமும் இறைவார்த்தையை திறந்த இதயத்தோடு படித்து தியானிக்கும் போதுதான் இறைவனின் ஞானத்தைப் பெற முடியும். ஆகவே அன்னை மரியாவை முன்மாதிரியாக கொண்டு இறைவார்த்தையை தியானிப்போம். அன்னையைப் போல் ஞானத்தின் இருப்பிடமாக திகழ்வோம்.

# எதிர்நோக்கின் அன்னை மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

## தொடக்கவுரை

நமதாண்டவர் இயேசு கிறிஸ்து பிறந்த 2025 ஆம் ஆண்டினை ஜூபிலி ஆண்டாக மிகச் சிறப்புடன் கொண்டாட திருத்தந்தை பிரான்சிஸ் அகில உலகத் திருஅவைக்கு அழைப்பு விடுக்கின்றார். அதற்குத் தயாரிப்பாக இவ்வாண்டிலே நாம் எதிர்நோக்கின் பயணிகளாக பயணிக்கவும் தூண்டுகிறார். நம்பிக்கை, அன்பு, எதிர்நோக்கு ஆகிய மூன்றும் மிக முக்கிய கிறிஸ்தவப் பண்புகளாகக் கருதப்படுகின்றன. இம்மானுடத்தை தனது சாயலாகப் படைத்த இறைவனையும், அதனை மீட்ட இயேசுவையும், நம்மைப் புனிதப்படுத்தும் தூய ஆவியாரையும் நம்புகிறோம். இந்த மூவொரு இறைவனில் நம்பிக்கை கொண்டு நமது கிறிஸ்தவ பயணம் தொடர்கின்றது. இறைவனையும், அவர் படைத்த மக்களையும் அன்பு செய்வதே நமது பிறப்பின் நோக்கமாகக் கொண்டு வாழ, அன்பு என்ற நற்பண்பு நம்மைத் தூண்டுகிறது. இறுதியாக, எதிர்நோக்கு என்பது நாம் நம்புவதை அடைவோம் என்ற உறுதியான மனநிலையுடன் நிலைவாழ்வை நோக்கிப் பயணிப்பதாகும். எதிர்நோக்கு ஆண்டின் மூன்று பரிமாணங்களையும் இவ்வாண்டில் அதிகமாக சிந்திப்பது நமக்கு நன்மை பயக்கும். ஒன்று: உலகளாவிய சகோதரத்துவம் இரண்டு: ஏழைகளோடு தோழமை உணர்வு மூன்று: இயற்கையைப் பராமரிப்பது இத்தகைய உறவுப் பின்னணியில் அமைதியான, இணக்கமான ஒரு உலகை நோக்கி, இறையாட்சியை நோக்கி, அனைவரும் பயணிப்பது எதிர்நோக்கு ஆண்டின் மையமாக இருக்கின்றது. இப்பயணத்தில் இயேசுவும் மரியாவும் நம்முடன் இணைகின்றனர் என்று நம்புகிறோம். இக்கட்டுரையில் மரியா எவ்வாறு எதிர்நோக்கின் அன்னையாகத் திகழ்கின்றார் என்பதைக் காண்போம்.

## மெசியாவிற்கான எதிர்பார்ப்பு

இவ்வுலகை மீட்கப் பிறக்கவிருந்த கிறிஸ்து என்னும் மெசியா ஒரு பெண்ணிடம் பிறப்பார் என்ற எதிர்பார்ப்பு யூத மக்களிடையே நிலவி வந்தது. எனவே ஒவ்வொரு யூதப் பெண்ணும் அந்தப் பேறு தனக்குக் கிட்ட வேண்டும் என்று விரும்பினர். இந்தப் பெண்களுள் மரியாவும் ஒருவர். ஏனெனில் அவர் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவராகவே சிறு குழந்தை முதல் வளர்த்தெடுக்கப்பட்டார். தவமிருந்து அவருடைய பெற்றோர் மரியாவைப் பெற்றனர். மூன்று வயது முதல் எருசலேம் ஆலயத்தில் வளர்ந்ததாக நாம் மரபிலிருந்து அறிய வருகிறோம். அங்கு வேத நூல்களைப் படிப்பதிலும், பகிர்வதிலும், விளக்கம் தேடுவதிலும் முனைப்பாயிருந்தார். கோவில் பணிகளை ஆற்றினார். வயது முதிர்ந்தவர்களுக்கு உதவி செய்தார். ஏனெனில், அவர் பிறக்கும் முன்பே இறைவன் அவர்தம் அன்பு மகனுக்குத் தாயாகும் பேற்றினை அவருக்கு அருள எண்ணினார். எனவே பிறப்பு முதல் அருள் நிறைந்தவராக அவர் இருந்தார். அந்த இறை அருளில் வளர்ந்தார். மூழ்கித் திளைத்தார். இத்தகைய மரியா மற்ற பெண்களைப் போலவே மெசியா தன்னிடம் பிறக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பில் மேற்கூறிய அருள்வாழ்வின் புண்ணியங்களில் சிறந்து விளங்கினார் என்று நாம் உறுதியாகக் கூற முடியும். அவர் எதிர்பார்த்தது போலவே மீட்பரின் தாயாகும் மாபெரும் அழைப்பு அவருக்கு கொடுக்கப்பட்டது.





லூர்து நகர் - ஆயிரக்கணக்கான மக்கள்
அன்றாடம் அலைமோதும் இறைஅன்னையின் திருத்தலமாக
இன்று காட்சி தருகின்றது
அங்கு செல்பவர்கள் தங்களையே மறந்து
புதிய இறையனுபவம் பெற்றுத் திரும்புகின்றனர்
அங்கே நிகழும் பல புதுமைகள்
மனித சக்திக்கு அப்பாற்பட்டவை என்று
மருத்துவர்களும் அறிஞர்களும் சான்று பகர்கின்றனர்



**பல வருடங்களாக ஆகட்டும் இதழில் கவிதைகளை எழுதி வந்த திருச்சியை சார்ந்த திருமதி ஃபிலோம்மா 26.06.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அவருடைய பிரிவால் வருந்தும் அவருடைய கணவர் மற்றும் குடும்பத்தினருக்கு ஆகட்டும் இதழின் ஆசிரியர்கள், வாசகர்கள் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.இவருடைய ஆன்மா கடவுளில் இளைப்பாற வேண்டுகின்றோம்.**

சந்தா செலுத்துபவர்கள், மணியார்டர் மூலமாகவோ, வங்கி கணக்கு மூலமாகவோ, **Google Pay** மூலமகாவோ செலுத்தலாம். தகவல்கள் இரண்டாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **Google Pay** மூலம் பணம் செலுத்துபவர்கள் உங்கள் முகவரியை **8122795035** என்ற எண்ணுக்கு வாட்ஸ் அப் குறுஞ்செய்தியாக அல்லது சாதாரண குறுஞ்செய்தியாக அனுப்ப கேட்டுக் கொள்கின்றோம்

# லூர்து நகர் காட்சிகள்

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

லூர்து நகர் - அங்கே
1858 பிப்ரவரி 11-ம் நாள் முதல் ஜுலை 16-ஆம் நாள்
18 முறை பெர்னதெத் என்னும் சிறுமிக்கு அவளோடு
இரு சிறுவருக்கும் அன்னை காட்சி தந்தார்
தாகம் தணிக்க நீரோடையைத் தேடிச்சென்ற
பெர்னதெத்திடம்
அன்னை ஓர் இடத்தைக் காட்டி
அங்கே நீர் அருந்துமாறு பணிக்கிறார்
அந்த இடத்தில் பெர்னதெத் மூன்று முறை தோண்டியபின்
நீரூற்று பெருக்கெடுத்து ஓடியது
அந்த நீரைப் பருகிய சிறுமி பெர்னதெத் தாகம் தணிந்தாள்
இன்றும் நாள் தோறும் நூற்றுக்கணக்கானோர்
அந்நீரை அருந்திப் பல்வேறு நோய்களிலிருந்து
நலம் பெறுகின்றனர்

அன்னையைப் பார்த்து சிறுமி பெர்னதெத்
உங்கள் பெயர் என்ன என்று கேட்க – அவர்
அமல உற்பவம் நாமே எனப் பதிலிறுத்தார்
பாவிகள் மனந்திரும்ப மக்கள் செபிக்குமாறும்
அவ்விடத்தில் அன்னைக்கோர் ஆலயம் எழுப்ப
குருக்களிடம் சொல்லுமாறும்
அன்னை சிறுமியிடம் கேட்டுக் கொண்டார்

மேற்கு ஐரோப்பிய மக்களிடையே சமய வாழ்வு தளர்ந்து
ஆலயங்களெல்லாம் பொருட்காட்சித் தளங்களாக
காட்சி தருகின்ற இக்காலத்திலும்





**மெசியா பிறப்பிற்கான எதிர்பார்ப்பு**

மெசியா தன்னிடம் தான் பிறப்பார் என்ற செய்தியை வானதூதர் வழியாகக் கேட்ட மரியாவின் எதிர்பார்ப்பிற்கு அளவே இல்லை. இந்த எதிர்பார்ப்பு நிலையில் அவரிடம் வெளிப்பட்ட பண்புகள், புண்ணியங்கள், விழுமியங்களை நாம் ஆழ்ந்து தியானித்துக் கொண்டேயிருக்கலாம். இறைவனிடமிருந்து வந்த இறைவார்த்தையை நம்பினார். அது நிறைவேறும் என்று விசுவாசித்தார். இறைவனின் தாயாகும் பேற்றினை எண்ணி தன்னைத் தாழ்த்தினார். இறைத்திருவுளமே எனது பாக்கியம் என்று இறைத்திட்டத்தை முதன்மைப்படுத்தினார். பணிவிடை பெற அல்ல் பணிவிடை புரியவே மனுமகன் பிறக்கப் போகின்றார் என்பதை உணர்ந்தவராய் விரைந்தார் எலிசபெத்தின் வீட்டிற்கு. பணிவிடை புரிந்தார். மகிழ்வான செய்தியை அவரோடு பகிர்ந்து கொண்டார். மெசியாவைப் பற்றியும் அவரது முன்னோடியைப் பற்றியும் இறை ஆசீர் பெற்ற இரு பெண்களும் உரையாடல் நிகழ்த்தினர். மெசியாவின் புரட்சிகர செயல்பாடுகளை விடுதலைக் கீதமாக முழங்கினார்.

இறைவாக்கினர்கள், இறையடியார்கள் பலர் இயேசுவின் வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தனர். ஆனால் காலம் நிறைவுற்ற போது மரி என்னும் கன்னியின் வயிற்றில் ஒரு குழந்தையாகப் பிறக்க இறைவன் விருப்பம் கொண்டார். மகிழ்வோடும், அமைதியோடும், இந்த எதிர்பார்ப்பு காலம் கடந்து சென்றது. நிறை கர்ப்பிணியாக இருந்தபோது, தனது தெய்வமகன் பிறக்க இடமில்லாமல் அங்கும் இங்கும் அலைந்தபோது கூட, நீடித்த பொறுமையுடன் அன்னை காணப்பட்டார். நாமும் அன்னையைப் போன்று இறைவேண்டலில் நிலைத்திருந்து இறையருளை நிறைவாய்ப் பெற்று திருஅவையில் எதிர்நோக்கும் பயணிகளாக மாறுவோம். நம்மோடு பயணிக்கும் அன்னையை இனம் கண்டு கொள்வோம். அவரது வாழ்வைக் கண்டு பாவிப்போம். எப்போதும் இறைக்குரலுக்கு செவிமடுப்போம். இறை செயல்பாடுகளுக்குக் காத்திருப்போம்.

**இயேசுவின் உயிர்ப்பை நோக்கிய எதிர்நோக்கு**

அன்னை மரியாவின் இந்த எதிர்நோக்கு மிகவும் வெளிப்படையான முறையில் நற்செய்தியில் காணப்படவில்லை. ஆயினும் இயேசுவின் பாடுகளிலும், மரணத்திலும் அவரை முழுமையாகப் பின்பற்றி இறுதி வரை கல்வாரியில் சாகாமலேயே நின்று கொண்டிருந்த அவர்தம் மகனின் உயிர்ப்புக்காகக் காத்திருந்தார் என்பதை நாம் நம்பலாம். சிலுவையில் தம் மகனின் இறப்பினைக் கண்டபோதும், துயரத்தில் மூழ்கிய போதும், அவர் எதிர்நோக்கை இழக்கவில்லை. ‘ஆகட்டும்” என்ற பதில்மொழியைப் புதுப்பித்தார். இயேசுவின் சீடத்திகள் அவரின் அடக்கச் சடங்கினை நிறைவு செய்ய கல்லறை நோக்கிப் பயணித்தனர். ஆனால் அன்னை மரியா இயேசுவின் பாடுகளின் நினைவில் அவரோடு ஒன்றித்திருந்தார். இயேசுவின் உயிர்ப்பு நிகழ்வுக்காகக் காத்திருந்தார். உயிர்ப்பைப் பற்றிய இயேசுவின் அமுத மொழிகளைச் சிந்தித்து தனது நம்பிக்கையை ஆழப்படுத்திக் கொண்டிருந்தார். இயேசுவின் சிலுவைப்பாதையில் அவரைப் பின்சென்ற மரியா உயிர்ப்பின் அனுபவத்தைப் பெற தகுதியான முதல் பெண் என்று எவரும் ஏற்றுக்கொள்ளலாம். உயிர்ப்பு அனுபவம் தான், அவரை சிதறிக் கிடந்த சீடர்களையெல்லாம் ஒன்று திரட்ட சக்தியைக் கொடுத்தது. அன்னையிடம் விளங்கிய இந்த எதிர்நோக்கு நமக்கு சிறந்த பாடமாக அமைகிறது. நமது துன்பங்கள், இக்கட்டுகள் அனைத்தும் கடந்து போகும். நாம் செய்ய வேண்டியது இறைவனை நெருங்கிச் செல்வது ஒன்றுதான். இச்சூழலில் நாம் நினைவு கூற வேண்டியது ‘இம்மைக் காலத்தில் நாம் படும் துன்பங்கள் நம்மிடம் வெளிப்படப் போகிற மகிமையோடு ஒப்பிடவும் தகுதியற்றவை” என்ற பவுலடியாரின் வார்த்தைகளையே. எனவே இறையாட்சியைக் கட்டியெழுப்பும் பணியில் நமக்கு வரும் சிலுவைகளைத் துணியுடன்

சந்திப்போம். அந்தச் சந்திப்பிலே இயேசுவின் உயிர்ப்பு அனுபவத்தை உணர்வோம். அந்த அனுபவத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்வோம்.

**தூய ஆவியாரின் வருகைக்கான எதிர்நோக்கு**

இயேசு விண்ணகம் செல்லும்போது ஆவியாரின் வருகைக்காக தம் சீடர்களை இறைவேண்டலில் இணையப் பணித்தார். அன்னை மரியா முதன்மைச் சீடராக இம்முயற்சியில் இறங்கினார். அனைத்து சீடர்களையும் ஒன்றிணைத்து ஆவியாரின் வருகைக்காக பத்து நாட்கள் தொடர்ந்து இறைவேண்டலில் ஈடுபட்டார். பெந்தக்கோஸ்து பெருவிழாவன்று ஆவியாரின் அருள் வரங்களை அனைவரும் அபரிவிதமாகப் பெற்றனர். இயேசுவின் சீடர்கள் திருத்தூதர்களாகினர். அவர்கள் இறைவாக்கு உரைத்தனர். நற்செய்தியைப் பரப்ப பல நாடுகளுக்குப் பயணித்தனர். இயேசுவுக்காக துன்பங்களை, ஏன் மரணத்தையும் கூட மகிழ்வுடன் ஏற்றனர். மரியாவும் ஆவியாரின் செயல்பாடுகளைப் பற்றிய இயேசுவின் போதனைகளை மனதில் பதித்து வைத்திருந்தார். ஒருபுறம் சீடர்களை நற்செய்தியைப் போதிக்க அனுப்பினார். மறுபுறம் தொடக்க காலத் திருஅவை இறையாட்சி சமூகமாக உருவெடுப்பதில் தனது பெரும் பங்கினை அளித்தார். நாம் இப்போது அழுத்தம் தருகின்ற ஒன்றிப்பு, பங்கேற்பு, அறிவிப்பு என்ற கூட்டியக்கத் திருஅவையின் கூறுகள் அங்கு முளைவிட்டன. முதல் கிறிஸ்தவர்களின் புதிய வாழ்வு நெறியைக் கண்டு அனைவரும் வியந்தனர். இத்தகைய திருஅவையைப் போன்று இன்றைய திருஅவை மாற வேண்டும் எனும் எதிர்பார்ப்பையே திருத்தந்தை நாம் கண்முன் வைக்கின்றார். நாமும் இதை அடைய தொடர்ந்து எதிர்நோக்கின் பயணிகளாக செயல்பாடுகளில் இறங்குவோம்.

**நிறைவுரை**

எதிர்நோக்கின் அன்னை மரியா நமக்கு பல செய்திகளைத் தருகிறார். எதிர்காலத்தில் நல்லதே நடக்கும் என்னும் மன உறுதியே எதிர்நோக்கு. இதை மரியா தன் மனத்தில் ஆழமாகப் பதித்து வைத்திருந்தார். தன் வாழ்வில் எவ்வளவோ சோதனைகளை சந்தித்தார். தன் மகன் புறக்கணிக்கப்பட்ட போது, அனைத்தையும் பொறுமையுடனும் தாழ்ச்சியுடனும் ஏற்றுக் கொண்டார். காரணம் அவரது ஆழ்ந்த நம்பிக்கை. இறைவன் பெரிய காரியங்களை ஆற்றுமுன் துன்பம் என்னும் சிறிய உலையில் புடமிடுவார் என்பதை தன் உள்ளத்தில் நன்கு உணர்ந்திருந்தார். நாமும் நமது அன்னையைப் போன்று இறைவன் நமக்கு நல்லதையேச் செய்வார் எனும் உறுதியான மனநிலையுடன் நமது வாழ்க்கைப் பயணத்தை நம்பிக்கையுடன் தொடர்வோம்.

எதிர்நோக்கிய வாழ்வில் அன்னை எப்போதும் மகிழ்ந்து இருந்தார். எனவே தான் மெசியாவின் தாயை இஸ்ரயேல் இனத்தின் பிரதிநிதியாக எலிசபெத்து இனம் கண்டு கொண்டதும் அகம் மகிழ்ந்தார். அந்த மெசியாவின் இறையாட்சி செயல்பாடுகளை நினைத்துப் பெருமை அடைந்தார். எல்லா தலைமுறையினரும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே என்று உளம் பூரித்து நின்றார். நாமும் மண்ணகத்தை விண்ணகமாக மாற்றும் இறையாட்சிப் பணிகளில் நம்மை ஈடுபடுத்தும் போது நம் உள்ளத்தில் நிறைந்த மகிழ்ச்சி பொங்குகிறது. இதையே புனித பவுலடியார் 'எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள்" என்று கூறுகிறார் (உரோ 2:12). எதிர்நோக்கே நமது வாழ்வின் நோக்கத்தையும் இலக்கையும் தருகிறது என்பதை நாம் இங்கு உணர்கின்றோம்.

எதிர்நோக்கின் அன்னை அடைந்த விண்ணக மாட்சியை, இறைமக்கள் அனைவரும் அடைய வேண்டும் என்பது திருஅவையின் எதிர்பார்ப்பு. மரியா இறையருளில் நிலைத்திருந்து இறைவனின் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றினார். இதனால் அவர் சந்தித்த துன்பங்களை பொறுமையுடன் ஏற்று மீட்பு அலுவலில் தனக்குரிய பங்கை அளித்தார். இவ்வாறு விண்ணக மாட்சியில் பங்கு பெற்றார். எதிர்காலத்தில் திருஅவை அடையவிருக்கின்ற மாட்சியின் முன்னோடியாக அன்னை இங்கு நிற்கின்றார். நிலைவாழ்வை நோக்கிய நமது திருப்பயணத்தில் முழு விடுதலை அடைந்த மரியா நமக்கு முன்மாதிரியாக விளங்குகின்றார். அன்னை மரியாவைப் போன்று நாமும் நம்பிக்கையுடனும், மகிழ்வுடனும் வாழ எதிர்நோக்கின் பயணிகளாக நம்மை உருமாற்றுவோம்.





ஏற்றுக்கொண்டு பயணித்திட வேண்டும். இப்பயணம் இறைவார்த்தைக்கும் அது வெளிப்படுத்தும் உண்மைக்கும் சான்று பகர்கின்றதாக இருக்க வேண்டும். இதைத்தான் இரண்டாம் வத்திகான் சங்கம் மரியாவுக்கு நாம் செலுத்தும் சிறந்த பக்தி வணக்கம் என்று அறிவுறுத்துகின்றது. மரியா இறைவன் இரக்கத்தை அனுபவித்து அது எல்லோருக்கும் கிடைக்கும் என்று அறிவிக்கின்றார். நம் அன்றாட பக்தி முயற்சியில் மரியாவின் மீது பக்தி என்பது நம் கவனத்தை அதிகமாக ஈர்க்கின்ற, ஒன்றாகிறது.

மரியாவைப்போல இறை வார்த்தைக்கு செவிமடுத்து இறைவனின் திட்டத்தை நிறைவேற்றுவதே உண்மையான மரியாவின் பக்தியாகும். இந்த தாயானவள் இயேசுவின் தாய் மட்டும் அல்ல நமக்கு எல்லோருக்கும் தாய், நம் கண்ணீருக்கு செவிசாய்க்கும் அன்னை. அன்னை மரியா இறை வார்த்தைக்கு மட்டுமே பணிந்தும் துணிந்தும் நடந்தும் காட்டிய துணிச்சல் மிக்க பெண்மணி. படைப்பாளராகிய கடவுளை தன் கருவறையில் இதயத்திலும் சுமந்தவர். மரியா தன் இரத்தத்தை இயேசுவின் மானிட உடலுக்கு வழங்கி மானிடப் பிறவியாக நம்மை வாழ்விலும் வழிபாட்டிலும் ஈர்த்துக் கொண்டு வருகிறார். நாசரேத்தூரில் இருந்த கன்னியான மரியாவை அதிதூதரான கபிரியேல் மங்கள வார்த்தை அறிவிப்பின் மூலம் அழைத்து mt s;mej mi og;Gf;F gj;pyhf nfhLj;j ''ஆகட்டும்'' என்ற சம்மதம் தொடங்கி கல்வாரி வரையிலும், பின்னர் கல்வாரி தொடங்கி மேல் அறை வரையிலும் மேல் அறையில் பெந்துகோஸ்தே தொடங்கி திருச்சபையின் வரலாறு நீண்டிருக்கும் இன்றுவரையிலும் திரு அவையில் அன்னை மரியாளின் ஆக்கப்பூர்வமான உடனிருப்பு ஆச்சரியமானது. அன்னை மரியாளின் இறைத் தாய்மைதான் எல்லாவற்றுக்கும் அடிப்படை. அவள் தன் மகனுக்கு தளர்வின்றி தொடர்ந்து திடம் தந்ததோடு மட்டுமல்லாமல் தனது மகனின் உயிர்ப்பு மற்றும் விண்ணேற்புக்கு பின் தன் மகனின் சீடர்களான தோழர்களை ஒருங்கிணைத்து நெறிப்படுத்தி தந்தை கடவுள் திட்டமிட்டு இருந்த மீட்பின் முழுமையை தொய்வின்றி நிறைவேற்றிக் கொண்டும், திரு அவையை இன்று வரை அழகாக நடத்தியும் வருகின்றாள்.

அன்னை மரியாள் இயேசுவுக்கு பின்னால் செல்லும் அன்புநிறை சீடராகவும், இயேசுவுக்கு முன்னால் செல்லும் ஆகச்சிறந்த திருத்தூதராகவும் இயங்குகின்றார். நம் திரு அவையை உயிருள்ள ஒரு இறை இயக்கமாக செயல்பட உந்துசக்தியாக விளங்குகின்றார். இப்படிப்பட்ட அன்னை மரியாளின் பண்புகளை கண்டு நாம் நம் வாழ்க்கை முறையினை அமைத்துக் கொள்ள வேண்டும் பக்தியோடு அவளுக்கு வணக்கம் செய்ய வேண்டும்.

சிலுவையில் தொங்கிய இயேசு உயிர்விடும் நிலையில் தம் சீடர்களை நோக்கி □ இதோ உன் தாய்□ என்று சொல்லி அன்னையின் பின்னால் தம் சீடர்களை அணிவகுத்து நிற்கச் சொல்லி அறிவுறுத்துகின்றார். தனது தாயை தூய ஆவியானவரில் தன் சீடருக்கு கொடுப்பதன் வழியாக உலகளாவிய தாயாக மரியாவை ஏற்படுத்துகின்றார். இதனால் சீடர்கள் அனைவரும் கடவுளின் பிள்ளைகள் ஆகின்றனர். மரியா தெய்வீக இரக்கத்தில் சிறந்தவர். அவருக்கு அஞ்சி நடப்போருக்கு தலைமுறை தலைமுறையாய் இரக்கம் காட்டி வருகிறார். (லூக்கா 1 : 50) மரியாவின் கருவறையே இரக்கத்தின் இருப்பிடமாக இருக்கின்றது. மரியாள் ''ஆகட்டும்'' என்று கூறிய பிறகு கடவுளை பெற்றெடுக்கிறார். அவரின் இதயமும் கடவுளின் இதயமும் ஒன்றிணைந்தன. கடவுளின் முடிவில்லா இரக்கத்தையும், ரகசியத்தையும் தன்னில் கொண்டவராக, இதன் வழியாக கடவுள் தம்மையே மீட்பு வரலாற்றில் வெளிப்படுத்த முயல்கின்றார். இப்படிப்பட்ட சிறப்புமிக்க தாயை, பண்புகள் மிக்க தாயை, பரிவிரக்கம் உள்ள தாயை, பணிவு மிக்க தாயை, பாசம் மிக்க தாயை, அன்பு மிக்க தாயை, அரவணைக்கும் தாயை, ஆறுதல் அளிக்கும் தாயை, நம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் தாயை பக்தியோடும் பரவசத்தோடும் வணங்கி கொண்டாடி மகிழ்வோம்.



## பொதுநிலையினரின் பார்வையில் மரியா 16

திரு. பரிசுத்தமணி சோழிங்கநல்லூர், சென்னை

### மரியாவிடம் பக்தி

அன்னை மரியாவின் பக்தியை நம் தமிழ் மண்ணில் முதல் முதலாக வேரூன்ற செய்தவர்கள் அயல்நாட்டு மதபோதகர்கள். அதிலும் குறிப்பாக இயேசு சபையை சார்ந்த குருக்கள் என்பதில் எந்த விதமான ஐயமும் இல்லை தமிழ் மண்ணில் நம் மரபுக்கேற்றார் போல, கலாச்சாரத்திற்கு ஏற்றார்போல, பழக்க வழக்கங்களுக்கு ஏற்றார் போல, பண்பாட்டுக்கு ஏற்றார்போல, மரியாவின் பக்தியை விதைத்தவர் வீரமாமுனிவர். மரியாவின் பக்தி என்பது கிறிஸ்தவத்தில் பிரிக்க முடியாத ஒன்று. இயேசுவைப் குறித்து எங்கெல்லாம் அறிவிக்கப்படுகிறதோ, இயேசுவைப் குறித்து எங்கெல்லாம் நினைவு கூறப்படுகிறதோ, இயேசுவை குறித்து எங்கெல்லாம் பகிரப்படுகிறதோ, இயேசுவை குறித்து எங்கெல்லாம் விவாதிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் இறைவனின் தாய் மரியாவும் சேர்த்து அறிவிக்கப்பட்டு அவரின் வணக்கமுறைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. மரியின் ஊழியர் சபையை சேர்ந்தவர்கள் தமிழகம் வந்து 50 ஆண்டுகள் நிறைவுற்றாலும் அவர்கள் மரியின் மீது அதிகமாக பக்தி கொண்டதன் காரணமாக மரியின் பக்தியை முன்னிலைப்படுத்தி அவர்கள் ஆற்றி வரும் காரியங்கள் மதிக்கப்பட வேண்டியவை. மரியின் பக்தி என்பது ஜெபமாலை ஜெபிப்பதிலும், வணக்கமாதங்களைக் கொண்டாடுவதிலும், திருயாத்திரை செல்வதிலும், விரதங்கள் இருப்பதிலும் மட்டும் அடங்கி விடாமல் மக்களின் வாழ்க்கை முறையை மாற்றி மனமாற்றத்திற்கு வித்திட வேண்டும். இறையரசை கட்டி எழுப்பிட உதவிட வேண்டும். நல்ல கத்தோலிக்கர்களாக பக்தி உள்ள கத்தோலிக்கர்களாக, சான்று பகரும் கத்தோலிக்கர்களாக மற்றவர்களுக்கு வழிகாட்டிட வேண்டும்.

அன்னை மரியாவை தெய்வ நிலைக்கு உயர்த்தி கைக்கு எட்டாத தூரத்தில் வைத்து விடாமல் அன்னை நம்மை போல ஒரு மனித பெண்மணி என்றும், நம்மோடு உறவாடும் மனிதப் பெண்மணி என்றும், நம்மோடு உரையாடும் மனித பெண்மணி என்றும். இறையருள் நிரம்பப் பெற்றவர் என்றும், இறைத்திட்டத்தை உண்மை உறுதியுடன் செயல்படுத்துகின்றவர் என்றும், தந்தையாம் இறைவனுக்கு மகளாகவும் மீட்பு திட்டத்தில் அவரோடு முழுமையாக ஒத்துழைத்தார் என்றும், கிறிஸ்துவின் முதல் சீடர் என்றும், சிறப்பான சீடர் என்றும், உண்மையான சீடர் என்றும், உறுதியான சீடர் என்றும், இறையரசின் வருகையை இயேசு அறிவிப்பதற்கு முன்பாக ''என் ஆன்மா'' பாடலில் அறிவித்தவர் என்றும் எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். கிறிஸ்தவ நம்பிக்கையாளர்கள் நம்பிக்கை வாழ்வில் ஆழ்ந்த பொருளுக்குள் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டுமென்றால் பக்தியினும் ஆரம்ப நிலையை கடந்து இயேசுவின் சீடத்துவ அர்ப்பணிப்புக்குள் முழுமையாக தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இந்த ஈடுபாட்டுக்கு அன்னை மரியாவின் வாழ்வும், வார்த்தையும், அவரது ஆளுமையும் அடித்தளமாக அமையும். மரியாவை தங்கள் வாழ்வின் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டவர்கள் மேலோட்டமாக பக்தி பரவசங்களை கடந்து வேரோட்டமாக மரியாவின் வாழ்வை தங்கள் உள்ளத்தில்





# அன்னையின் 67 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## நலம் தரும் அன்னைத் திருத்தலம், சொலாரோலோ (Solarolo) எமிலியா ரொமாஞ்ஞா, இத்தாலி

### பாகம் - 1

இறைவனின் அன்னை கன்னி தாயின் மகிமையை அறியாதார் எவருமில்லை என்று சொல்லுமளவிற்கு இனம், மொழி, மதம் கடந்து மரியாதை செலுத்தப்படுகிறவர் அன்னை மரியாள் என்பதை நாம் அறிவோம். நம் அனைவரின் பரிந்துரைப்பாளராக அவர் என்றும் இருக்கிறார் என்பது வெள்ளிடைமலை உண்மையே. நம் வாழ்வில் இரண்டற கலந்திருக்கும் அன்னைக்கு ஆலயங்களும், திருத்தலங்களும் உலகமெங்கும் எழுப்பப்பட்டுள்ளன. திருஅவையின் தொடக்க காலத்திலிருந்தே இத்தாலியில் எழுப்பப்பட்டுள்ள பல்வேறு பேராலயங்களை பற்றி இத்தொடரில் கண்டுள்ளோம்.

இக்கட்டுரையில் நாம் காணும் நலம் தரும் அன்னையின் திருத்தலம் அளவில் சிறிதாக தோன்றினாலும், நீண்ட நெடிய வரலாற்றை கொண்டுள்ளது. அன்னையின் பரிந்துரை பற்றி சொல்லப்படும் செய்திகள் நம்மை வியப்புக்குள்ளாகுகின்றன.

இத்தாலியின் எமிலிலோ ரொமாஞ்ஞா பிரதேசத்தில் உள்ள ரவென்னா மாவட்டத்தில் பயேன்சா என்ற ஊருக்கு அருகில் உள்ள சிறிய ஊர் சொலாரோலோ (Solarolo) ஆகும். ஏறக்குறைய முன்னூறு ஆண்டுகளுக்கு முன், அதாவது கி.பி. 1729ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில் சொலாரோலோவுக்கு அருகில் இருந்த மொரொதானோ என்கிற ஊரில் வசித்த லுதோவிகோ கஸ்ஸானி என்கிற தையல்காரர் அருகிலிருந்த தனது தோட்டத்தை காணச் சென்றார். அங்ஙனம் அவர் செல்லும் வழியெல்லாம் உடல் குன்றி வீட்டிலிருக்கும் தனது மனைவி மற்றும் குழந்தைகளை பற்றியதாகவே இருந்தது. மேலும், தானும் ஜீரத்தால் அவதிப்படுவதைக் குறித்தும் கவலையடைந்தார். அக்காலத்தில், முந்தைய ஆண்டில் பெய்திருந்த மழைநீர் வடியாமல்

இருந்ததால் எங்கு பார்த்தாலும் டைபாய்டு காய்ச்சல் பரவியிருந்தது. கவலையோடு சென்று கொண்டிருந்தவர், சாலையோரத்தில் பியொந்தெல்லி என்கிற இடத்தில் வைக்கப்பட்டிருந்த குழந்தையை கரங்களில் தாங்கியிருந்த அன்னையின் திருஉருவத்தைக் கண்டு, அதனருகில் சென்றார். அருள் பொங்கும் அன்னையின் திருவதனம் அவரின் கண்களை குளமாக்கியது. அன்னையிடம் தனது மனக்குமுறல்களை எடுத்துரைத்தார். ஒவ்வொரு முறை அப்பகுதியை கடக்கும் போதும் கிருபை தாயபத்து செபத்தையும், மங்கள வார்த்தை செபத்தையும் செபித்துவிட்டு, 'நானும் உடல் நலம் இல்லாமலிருந்தால் யார்தான் குடும்பத்தை காப்பாற்றுவார்? ஓ அன்னையே எனக்கு உதவும்' என்று செபித்துவிட்டு செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். உடல் வேதனையாலும், மனவேதனையாலும் பீடிக்கப்பட்டிருந்த அவர், அன்றும் மனம் வெதும்பி அன்னையின் பரிந்துரையில் தன்னையும், தனது குடும்பத்தையும் ஒப்படைத்துவிட்டு தோட்டத்திற்கு சென்றார். மாலையில் வீடு திரும்பும் போது, அன்னையின் திருஉருவத்தின் அருகில் செபித்தபோது தான் உடல் நலம் பெற்றதை உணர்ந்தார். அன்னைக்கு நன்றி செலுத்திவிட்டு நிறைவான மனத்தோடு வீட்டிற்கு திரும்பியவருக்கு மற்றொரு ஆச்சரியம் காத்திருந்தது. வீட்டின் கதவு திறந்திருக்க, உடல் நலத்தோடு மனைவி வீட்டு வேலைகளை செய்வதையும், தியாக்கோனாக இருந்த அவரது மகன் தோன் சுசப்பே நலத்தோடு வீட்டின் முற்றத்தில் அமர்ந்திருப்பதை கண்டு எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தார். உடனடியாக தன் குடும்பத்தோடு பியொந்தெல்லியில் இருந்த அன்னையிடம் சென்று நன்றி செலுத்தினார். மொரொதானோ கிராமம் முழுவதும், நீண்ட காலமாக உடல் நலம் குன்றியிருந்த லுதோவிகோவின் குடும்பம் உடல் நலம் பெற்ற செய்தியை ஆச்சரியத்தோடு பார்த்து. அவர்கள் உடல் பெற்றதற்கு காரணம் பினொந்தெல்லியில் இருந்த அன்னையின் பரிந்துரையே காரணம் என்பதை அறிந்து







Post Partum (after the birth) என்கின்றோம். ஆக மரியா எப்போதும் பழுதற்ற கன்னியாக முக்காலத்திற்கும் கன்னியாக இருக்கின்றார்.

இந்த பழுதற்ற கன்னிமை வழியாகப் பிறந்த இயேசு தூயவர். தூய ஆவி உம்மீது வரும், உன்னதக் கடவுளின் வல்லமை உம்மீது நிழலிடும். ஆதலால் பிறக்கும் உம் குழந்தை தூயது (லூக் 1,35) தூய குழந்தையை பெற்றெடுத்த மரியாவும் தூயவர். லேவியர் நூல் 12,1-8 உள்ள வசனங்களில் கூறப்பட்டு இருப்பதுபோல் தீட்டுப்பட்டவர் அல்லர். மாறாக மரியா தீட்டு இல்லாதவர். ஏனென்றால் இயேசு இரத்தத்தினாலோ, உடல் இச்சையினாலோ, ஆண்மகன் கொள்ளும் விருப்பத்தினாலோ பிறந்தவர் அல்லர். மாறாக கடவுளால் பிறந்தவர் (யோவ 1,43).

அன்னை மரியாவை கடவுள் முன்குறித்து, வைத்து பாவக் கறையில் இருந்து காப்பாற்றினார். அன்னை மரியாவும் அதற்கேற்ப தன்னை முழுவதுமாக இறைத் திட்டத்திற்கு கையளித்தார். எனவேதான் அன்னை மரியா இயேசுவின் பிறப்பின்போது மகப்பேறு வேதனை இல்லாமல் இயேசுவைப் பெற்றெடுத்தார். இது புதிய ஏவாளான மரியாவை பழைய ஏவாளிலிருந்து பிரித்துக் காட்டி அன்னையின் கன்னித் தன்மையைச் சுட்டிக் காட்டுகிறது. அவர் பெண்ணிடம் உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன் வேதனையில் நீ குழந்தைகளைப் பெறுவாய் (தொ.நூ 3,16).

மோயீசனுக்கு ஆண்டவர் எரியும் முட்புதர் வழியாகக் காட்சி தந்தபோது முட்புதர் நெருப்பால் எரிந்தது. ஆனால் அம்முட்புதர் தீய்ந்து போகவில்லை(வி.ப 3,2). அதுபோலவே அன்னை மரியா இயேசுவை கருத்தரித்து பெற்றெடுத்தாலும் அவர் கன்னிமைக்குக் களங்கம் ஏற்படவில்லை, பழுது ஏற்படவில்லை. அது தீய்ந்து போகாத முட்புதர் போல அப்படியே இருக்கிறது. காரணம், அன்னை மரியா தன் உடல் தூய ஆவியின் ஆலயம் என்பதை மறக்கவில்லை.(1கொரி 6,19)

இன்று நம் சமுதாயத்தில் பிறரைக் குறிப்பாக பெண்களை ஒரு போகப் பொருளாக பார்க்கிறோமா? பிறரின் கற்பை நமது கற்பைப் பாதுகாத்து, நம் உடலைத் தூய ஆவியின் ஆலயமாக கருதுவோமா? பிறரை ஊனக் கண்கொண்டு பார்த்து, இச்சையுடன் நோக்கிய தருணங்களுக்காக வருந்துவோம். அன்னையைப் போல நாமும் நம் உடலை இறைவனின் ஆலயமாக மாற்றி, உடலில், உள்ளத்தில் கற்பு நெறியுடன் வாழ செபிப்போம்.

பழைய ஏற்பாட்டு பின்னணியில் இருந்து பார்க்கும்போது இஸ்ரயேல் மக்கள் கன்னித்தன்மையை ஒரு சாபமாக, பாவமாக அவமானத்தின் உச்சமாக கருதினர். ஏனென்றால் கடவுள் மனிதனைப் படைத்தது கன்னித்தமையுடன் இருக்க அல்ல மாறாக பலுகி பெருகி விண்மீன்களைப் போல் அதிக பிள்ளைகளைப் பெற்றெடுக்க என அவர்கள் நம்பினர். கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி பலுகி பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் என்றார் (தொ.நூ 1,28). மேலும் இப்தாவின் புதல்வி தன் கன்னிமையை குறித்து துக்கம் கொண்டாடுவதை நீதித்தலைவர்கள் நூல் நமக்கு தெளிவாக விளக்குகிறது. அவள் தந்தையிடம் என் விருப்பத்தை நிறைவேற்றுங்கள், இரண்டு மாதங்கள் என்னைத் தனியாக விடுங்கள், நான் மலைகளில் சுற்றித் திரிந்து என் கன்னிமையைக் குறித்து என் தோழியருடன் துக்கம் கொண்டாடுவேன் என்றாள் (நீதி.தலை 11,37).

புதிய ஏற்பாட்டில் எலிசபெத்துக்கு குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. இஸ்ரயேல் சமூகத்தில் அவருக்கு ஒரு இகழ்ச்சியாகவே இருந்தது. எனவேதான் மக்களுக்குள் எனக்கிருந்த இகழ்ச்சியை நீக்க என் மீது ஆண்டவர் அருள் கூர்ந்து இந்நாளில் இவ்வாறு செய்தருளினார் என எலிசபெத்து கருவுற்று இருந்தபோது கூறினார் (லூக் 1,25).

இப்படி யூத மரபில் ஊன்றி வளர்ந்த மரியவை ஒரு ஆணின் துணையின்றி குழந்தையை பெற்றெடுக்க கபிரியேல் வானதூதர் வழியாக ஆண்டவர் அழைக்கின்றார். இதோ கன்னி கருவுற்று ஒரு ஆண்மகனைப் பெற்றெடுப்பார்.(மத் 1,22) அதற்கு மரியா வானதூதரிடம் இது எப்படி நிகழும் நான் கன்னி ஆயிற்றே என்றார்.(லூ 1,34)

மரியாவின் பழுதற்ற கன்னித்தன்மை மரியாவின் முழு உடல் ஆளுமைத் தன்மையை மட்டும் சுட்டிக்காட்டவில்லை. மாறாக மரியாவின் முழு ஒத்துழைப்பையும் இறைவனின் மீட்புத் திட்டத்திற்கு தன்னையே முழுவதுமாக ஒப்புக் கொடுத்ததையும் காட்டுகிறது.

அன்னை மரியா இயேசுவின் பிறப்பிற்கு முன்பாக கன்னியாக இருந்தார். இதை இலத்தீனில் Ante Partum (Before Birth) என்கின்றோம். இயேசுவின் பிறப்பின்போதும் மரியா கன்னியாக இருக்கின்றார். இதை இலத்தீனில் Inpartu (during birth) என்கின்றோம். இயேசுவின் பிறப்பிற்கு பின்பும் மரியா பழுதற்ற கன்னியாக இருக்கின்றார். இதை இலத்தீனில்







மக்கள் சாரை சாரையாய் அன்னையின் அற்புத திருஉருவத்தை காணவும், அவரின் பரிந்துரையை நாடவும் சென்றனர்.

பியொந்தெல்லியில் இருந்த அன்னையின் திருஉருவம் பயென்சா பகுதியில் பிரபல்யமான செராமிக் மண்ணில் செய்யப்பட்டிருந்தது. அன்னையின் திருஉருவம் இருந்த பகுதி முழுவதையும், கி.பி. 1683லேயே சொலாரோலோ பகுதியில் இருந்த மங்களவார்த்தை பக்தி இயக்கமானது பியொந்தெல்லி இடத்தை விலைக்கு வாங்கி, பேரருட்தந்தை. நிக்கோலோ பல்தசாரியின் பராமரிப்பில் ஒப்படைத்திருந்தனர். லுதோவிக்கோ குடும்பத்திற்கு ஏற்பட்ட அற்புத சுகமளிக்கும் நிகழ்வுக்கு பின் மக்களின் தொடர் திருயாத்திரைகள் அப்பகுதியை மிகவும் பிரபல்யமாக்கியது. அதனைத் தொடர்ந்து பேரருட்தந்தை. நிக்கோலோ அவர்கள் அன்னையின் திருஉருவத்தை ஆலயத்திற்கு இடம் மாற்றினார். அனைவருக்கும், குறிப்பாக குழந்தைகளுக்கு அன்னையின் பெருமைகளை எடுத்துச் சொல்லி அன்னையின் பரிந்துரைகளை நாடுவோரின் செபங்களை, தன் திருமகனாகிய கிறிஸ்துவிடம் எடுத்துரைத்து நிறைவேற்றி தருவார் என்கிற உண்மையை விளக்கி சொல்லி அவர்களில் அன்னையின் மீதான உண்மையான பக்தியை ஏற்படுத்தினார். அன்னையின் நோக்கிய செபங்களையும் குறிப்பாக லொரேத்தோ மன்றாட்டுமாலையை செபிக்கவும், அன்னையின் திருஉருவத்தை பவனியாக கொண்டு செல்லும் பழக்கத்தையும் அவர்களில் விதைத்தார். அன்னையின் மீதான பக்தியின் பரிணாமமாக பியொந்தெல்லியிலிருந்த அன்னையை, 'நலம் தரும் அன்னை' மக்கள் அழைக்க ஆரம்பித்தனர்.

இந்த ஆலயத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அன்னை மரியாளின் திருஉருவமானது, செராமிக் கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. அன்னையாளவள் மஞ்சள் நிற ஆடையையும் நீல நிற இடைக்கச்சையையும், நீல நிற மேலங்கியை அணிந்தவளாக இருக்கின்றாள். அவரது கையில் ஆடையேதுமின்றி அன்னை கழுத்தை



அரவணைத்துக் கொண்டு அண்டிவரும் அனைவரையும் உற்று நோக்குகின்ற திருமகனின் திருஉருவமும் உள்ளது. குகை கோவிலில் வீற்றிருந்த அன்னையை நோக்கி ஏராளமான மக்களும், அவர்களோடு மங்களவார்த்தை அன்னையின் குழுமமும் கி.பி. 1730ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து செல்ல ஆரம்பித்தனர். இக்குழுவினரே குகையின் பராமரிப்பையும், பக்தர்களை ஒழுங்குபடுத்துவதையும், காணிக்கைகளை பாதுகாக்கும் பணிகளையும் தங்களின் பொறுப்பாளர் தந்தையோடு இணைந்து செயல்படுத்த ஆரம்பித்தனர். அந்நாள்களில் பொறுப்பாளராக இருந்த பேரருட்தந்தை. கம்பியோனே போன்தேலுங்கி, இத்திருஉருவத்திற்கு 'நலம் தரும் அன்னை' எனப் பெயரிட்டார். மேலும், பலரின் எதிர்ப்புகளுக்கிடையில், குகையின் சுவரில் பதிக்கப்பட்டிருந்த திருஉருவத்தை பெயர்த்தெடுத்து, சுற்றுபுற கிராமங்களுக்கெல்லாம் பவனியாக கொண்டு சென்றார். அதனால், அன்னையின் மகிமை இன்னும் அதிகமாக விளங்களாயிற்று. ஆதிகரித்து வந்த திருப்பயணியரின் ஆன்மீக உதவிகளுக்காக, சொலாரோலோ பகுதியிலிருந்த குருக்கள், நாளுக்கு ஒருவராக வந்து பணியாற்ற தொடங்கினர். குருக்கள் தங்குவதற்காக ஒரு சிறிய அறையும் அன்னையின் திருஉருவம் இருந்த குகைக்கு அருகில் கட்டப்பட்டது.

அன்னையின் பெருமை பரவ ஆரம்பித்து, திருப்பயணிக்களின் எண்ணிக்கை அதிகமானதால், மங்களவார்த்தை குழுவினருக்கு சொந்தமான இடத்தில் புதிய ஆலயம் எழுப்ப முடிவுசெய்யப்பட்டது. அதற்காக நன்கொடைகள் பெறப்பட்டன. தேவையான அளவு பொருள் சேர்ந்தவுடன், பயேன்சா ஆயர் நிகோலோ லொமெல்லியின் அனுமதியுடன் ஆலயக் கட்டுமானத்திற்கான முதற் கட்ட பணிகள் தொடங்கின. நான்கு கட்டிட கலைஞர்கள் ஆலயத்திற்கான வடிவமைப்பு படங்களை தந்தனர். அவர்களில் கார்லோ செசரே சகலேத்தா என்பவர்





# மாதா மன்றாட்டு மாலை



9
அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

**பழுதற்ற கன்னியாய் இருக்கிற மாதாவே**

புலவர் ஒருவர் தம் நண்பர் வீட்டிற்குச் சென்றார். நண்பரின் மனைவி அவரை அன்புடன் வரவேற்று அவருக்கு உணவு பரிமாறினார். உணவு உட்கொண்டபின் புலவர் நண்பரிடம் உங்கள் மனைவி கற்புடையாள் என்றார். அதைக் கேட்ட நண்பருக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரை குளிர்ந்தது. பெருமிதத்துடன் புலவரிடம் புலவர் பெருமானே என் மனைவியின் கற்பை புகழ்வது எங்கள் இருவருக்கும் கிடைத்த பெரும்பேறு என்றார். ஆனால் புலவர் உங்கள் மனைவி கற்புடையாள் அதாவது அரிசியில் உள்ள கற்களைப் புடைக்காதவள் என்றார்.

கற்புநெறி என்பது பெண்களை மட்டுமின்றி ஆண்களையும் கட்டுப்படுத்தும் நெறியாகும். இதைத்தான் பாரதியார் பின்வருமாறு பாடுகின்றார்.

கற்புநிலை என்று சொல்வந்தார் இரு
கட்சிக்கும் அது பொதுவில் வைப்போம்

நம் அன்னை மரியை எடுத்துக் கொண்டால் அவள் கற்புக்கரசி, கற்பின் காவலி அவர் பழுதடையாமல் பத்தரைமாற்றுத் தங்கமாய் பளபளத்து கன்னி கழியாமலே இறைமகனை கருத்தரித்தார். கன்னியர்கள் தாய்மார்களாக இருக்க முடியாது. தாய்மார்கள் கன்னியர்களாக இருக்க முடியாது. இது உடல்சார்ந்த கன்னிமையின் நிலைப்பாடு. ஆனால் மரியா சூசையின் உறவின்றி கன்னியாக இருக்கின்றார். இயேசுவை ஈன்றெடுத்ததால் தாயாகவும் இருக்கின்றார். எனவேதான் மரியாவை கன்னித்தாய் என்கிறோம். பழுதற்ற கன்னியாய் இருக்கிற மாதாவே என்றுக் கூறி பாடுகின்றோம். அன்னை மரியாவின் பழுதற்ற கன்னிமை இயேசுவின் இறைத்தன்மைக்குக் கட்டிடத்தின் அடிக்கல் போன்று இருக்கிறது.



# புனித பெரகிரின்

O S M



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

புனித பெரெகிரின் 1265 இல் ∴போர்லியில் ஒரு பணக்கார உயர்வர்க்க குடும்பத்தில் பிறந்தார். இந்த நகரில் திருத்தந்தைக்கு எதிராக கலகம் செய்த குழுவில், 18 வயது நிரம்பிய புனித பெரெகிரினும் ஒருவர். இந்த தருணத்தில் நமது மரியின் ஊழியர் சபையின் அதிபராக இருந்த புனித பிலிப் பெனிசி, நமது மடத்தை சந்திக்க சென்றார். அவர் திருந்ததைக்காக பேசியதால், ∴போர்லியின் மக்கள் அவரை அடித்து, நகரத்தை விட்டு வெளியேற்றினர். அவரை அடித்ததில் புனித பெரெகிரினும் ஒருவர். ஆனால், அவர் தனது ஏறத்தாழ 30 வயதில் (1290 மற்றும் 1295 க்கு இடையில்) நமது சபையில் நுழைய விருப்பம் கொண்டார். அவரை இன்முகத்தோடு, பிலிப் பெனிசி ஏற்றுக்கொண்டார். இவரின் இந்த செயலை கண்டு, புனித பெரெகிரின் உருகிப்போனார். தன் வாழ்நாள் முழுவதையும் இத்தகைய பணிவான வாழ்வில் அர்ப்பணிக்க முடிவு செய்தார். எனவேதான், அவர் குருவாக மாறியதற்கான எந்த சான்றும் இல்லை. அவர் ஒரு மரியின் ஊழியர் சகோதரராகவே, இருந்திருக்க வேண்டும் என்பது வரலாற்று அறிஞர்களின் கருத்து. புனித பெரெகிரின் சியனா நகருக்கு படிப்பிற்க்காக அனுப்பப்பட்டார். பின் தனது சொந்த ஊரின் மடத்திலேயே இறக்கும் வரை இருந்தார். அவர் ஆழ்ந்த தவச் செயல்கள் செய்வதிலும், விதியைக் கடைப்பிடிப்பதிலும் மிகவும் கருத்தாய் இருந்தார். இவ்வாறு எல்லாம், நல்ல முறையில் சென்று கொண்டிருக்கும் பொழுது, அவருக்கு வலது காலில் ஒரு புண் வந்தது. அது புற்றுநோய் என்று கண்டறியப்பட்டது. மேலும், நோய் வேகமாக தீவிரத்தை அடைந்ததால், அக்கால மருத்துவர்கள் காலை துண்டிக்க வேண்டியது அவசியம் என்று கருதினர். அறுவை சிகிச்சைக்கு முந்தைய இரவில், புனித பெரெகிரின் எழுந்து, சிலுவையின் உருவத்தின் முன், அவர் குணமடைய மனதார செபம் செய்தார். களைப்பில் அங்கேயே உறங்கி விட்டார். அப்போது, கனவில் இயேசு சிலுவையிலிருந்து இறங்கி வந்து காலில் உள்ள புண்ணை தொட்டு குணம் செய்வதை கண்டார். பின்னர் அவர் விழித்துக்கொண்டு மீண்டும் தனது படுக்கைக்கு சென்றார். மறுநாள் காலை துண்டிக்க வந்த மருத்துவர் அவர் முழுமையாக குணமடைந்துவிட்டார் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

இந்த அதிசயம் ∴போர்லி மக்கள் அவர் மீது கொண்டிருந்த மரியாதையை அதிகரித்தது. 1345 ஆம் ஆண்டு மே 1 ஆம் தேதி புனித பெரெகிரின் இறைவனடி சேர்ந்தார். அவரின் இறுதிச் சடங்கின் போது இரண்டு அற்புதங்கள் நிகழ்ந்தன என்று வரலாற்று குறிப்புகள் கூறுகின்றன. தொடர்ந்து மக்கள் அவரின் பரிந்துரையை தேடி அவரின் கல்லறையை சந்திக்க சென்றனர். பல புதுமைகள் நடந்த பின், 27 டிசம்பர் 1726 ல் திருத்தந்தை எட்டாம் ஆசிர்வாதப்பர் இவரை புனிதராக அறிவித்தார்.மேலும், புற்றுநோய் நோயாளிகளின் பாதுகாவலராக திரு அவை அறிவித்தது.





தேர்ந்தெடுக்கப்பட்டு, அவரோடு இணைந்து பணிகளை மேற்பார்வையிட பேரருட்திரு. போன்தேலுங்கி மற்றும் மூவரை நியமித்தனர்.

கி.பி. 1731ஆம் ஆண்டு ஜீன் 6ஆம் தேதி ஆயர் லொமெல்லி ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டினார். பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்றன. கி.பி. 1732ஆம் ஆண்டு இளவேனீர் காலத்தில் ஆலயத்தின் சுவர்கள் மற்றும் மேற்கூரை அமைக்கும் பணிகள் நிறைவுற்றன. அதனை தொடர்ந்து ஆலயத்தின் சன்னல்களும், கதவுகளும் பொருத்தப்பட்டன. கி.பி. 1736 ஆம் ஆண்டு ஆலயத்தின் தரைதளமும், பலிப்பீடமும் ஆயரின் அனுமதியோடு ஜியோவான்னி புஸ்கினி என்பவரால் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டது.

கி.பி. 1736 ஆம் ஆண்டு செப்டம்பர் 16ஆம் தேதி பேரருட்தந்தை போன்தேலுங்கி புதிதாக கட்டப்பட்ட ஆலயத்தையும், பீடத்தையும் அர்ச்சித்தார். பின், அன்று மதியம் அன்னையின் திருஉருவமான ஆடம்பர பவனியாக சொலாரோலோ பங்கு ஆலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அன்னையின் திருஉருவமானது அவ்வாரம் முழுவதும் பங்கு ஆலயத்தில் வணக்கத்திற்காக வைக்கப்பட்டிருந்தது. பின் ஞாயிறு, செப்டம்பர் 23ஆம் தேதி, மதியம் ஆடம்பர பவனியாக பேரருட்தந்தை போன்தேலுங்கியால் எழுப்பப்பட்டிருந்த ஆலயத்திற்கு பவனியாக கொண்டு செல்லப்பட்டு, புதிதாக எழுப்பட்டிருந்த பீடத்தின் மேல் அழகுற கட்டப்பட்டிருந்த இடத்தில் அன்னையின் திருஉருவப்படமானது நிறுவப்பட்டது. இந்நிகழ்வின் நினைவாக அன்றிலிருந்து இன்றுவரை ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் கடைசி ஞாயிறன்று அன்னையின் திருஉருவமான அன்னையின் ஆலயத்திலிருந்து பங்கு ஆலயத்திற்கும், மீண்டுமாக பங்கு ஆலயத்திலிருந்து அன்னையின் ஆலயத்திற்கும் பவனியாக கொண்டு செல்லப்படுகிறது

இப்பவனியைக் குறித்த சுவராசியமான மற்றும் ஆச்சரியம் தரும் செய்திகளை அடுத்தத் தொடரில் காண்போம்.



திருப்பயணம் தொடரும்...........

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## நீதித்தலைவர்கள்



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | | | | | 4 |
| | 7 | | | | | | | 8 | |
| | | | 11 | | | | | | |
| | | | | | | 13 | | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | | | 12 | | | |
| | | 10 | | | | | 9 | | |
| | 6 | | | | | | | 5 | |
| 2 | | | | | | | | | 1 |

**வலமிருந்து இடம்**

1) மக்கள் பென்யமின் புதல்வரைக் குறித்து மனம் வருந்தினர். ஏனெனில் ஆண்டவர்……….. குலங்களில் ஒரு பிளவை ஏற்படுத்தினார்.

4) பெலிஸ்தியர் இதைச் செய்தது திமினாவின் மருமகன் சிம்சோன். ஏனெனில் திமினா அவர் மனைவியை எடுத்து அவருடைய தோழனுக்குக் கொடுத்துவிட்டான் ' என்றனர். எனவே பெலிஸ்தியர் சென்று…………. அவள் தந்தையையும் நெருப்பில் எரித்தனர்.

5) ஏனெனில் நீ கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுப்பாய். சவரக் கத்தி அவன் தலைமீது படக்கூடாது. ஏனெனில் பையன் பிறப்பிலிருந்தே கடவுளுக்கென ' நாசீர் ' ஆக…………..

8) பின்பு ஆண்டவரின் தூதர் ஒபிராவில் உள்ள ஒரு கருவாலி மரத்தடியில் வந்து அமர்ந்தார். அந்த மரம்………… குடம்பத்தவரான யோவாசுக்குச் சொந்தமானது

9) என்………….. இஸ்ரயேலின் படைத்தலைவர்களில் பெருமிதம் கொள்கிறது. மக்கள் நடுவில் தங்களை மனமுவந்து அளித்தவர்கள் இவர்களே! ஆண்டவரைப் போற்றுங்கள்!

12) ஆண்டவரின் பார்வையில் தீயதெனப்பட்டதை இஸ்ரயேலர் செய்தனர்………… கடவுளாகிய ஆண்டவரை மறந்து, பாகாலுக்கும் அசேராக்களுக்கும் ஊழியம் செய்தனர்.

13) இதோ! பாராக்கு சீசராவைத் துரத்திக் கொண்டு வந்தார். யாவேல் அவரைச் சந்திக்க வெளியே வந்தார். யாவேல் அவரிடம், ' வாரும்! நீர்…………ஆளை நான் உமக்குக் காட்டுகிறேன் ' என்றார். அவரும் அவருடன் உள்ளே செல்ல, இதோ! சீசரா இறந்து கிடந்தான்.

**இடமிருந்து வலம்**

2) அவர், ஐந்தாம் நாள் புறப்படுவதற்காக………. எழுந்தார். அப்போது பெண்ணின் தந்தை உம் இதயம் மகிழுமாறுபொழுது சாயும்வரை இங்கே தங்கும் ' என்றார்.





நாம் பிரமாணிக்கமாக இருப்பது நம் ஆசையாக வேண்டும் என்ற உணர்வை சுமந்து வரம் இப்புதுமையை விளக்கும் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

திருஅவை பற்றிய அழகான உருவகங்களை நமக்கு இவ்வாசகம் தருகிறது. மனிதன் மட்டுமல்ல கடவுளின் படைப்பு அனைத்தும் கிறிஸ்துவின் தலைமையில் கடவுளோடு ஒப்புரவாக்கப்படுகிறது. கிறிஸ்துவில் பகை, தீயநாட்டங்கள் ஒதுக்கிவைக்கப்பட வேண்டியவை என்பதையும் எடுத்துக் கூறுகின்றது இவ்வாசகம். ஏற்றமும் மாற்றமும் நிகழ இவ்வாசகத்தினை கவனமுடன் கேட்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, உம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் தங்கள் கடமையை உணர்ந்து தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்கள் மீது அக்கறை கொண்டு அவர்களின் ஆன்ம பசிபோக்கும் பக்தி முயற்சிகளை வளர்க்க உழைக்க வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2. கருணைக் கடலே இறைவா, உம்முடைய மக்களாகிய நாங்கள் அனைவரும் நீர் எங்கள் மீது கொண்டிருக்கின்ற அளவு கடந்த அன்பையும், இரக்கத்தையும் நினைவுகூர்ந்து எப்பொழுதும் உமக்கு பிரமாணிக்கமாய் வாழத் தேவையான அருள் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. வழிகாட்டியான இறைவா, எங்கள் பங்கில் உள்ள அனைத்து இளைஞர், இளம்பெண்களுக்காக உம்மை வேண்டுகின்றோம். அவர்கள் அனைவரும் உண்மை, நேர்மையை கடைபிடித்து, தீமையை விலக்கி நல்ல மனிதர்களாகவும், நல்ல கிறிஸ்தவர்களாகவும் வாழ வழிகாட்ட வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. மருத்துவராகிய இறைவா, எங்கள் குடும்பங்களில் பல்வேறு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து நோயாளிகளுக்காகவும் உம்மை வேண்டுகிறோம். நீர்தாமே அவர்களைத் தொட்டு குணப்படுத்தி மீண்டும் அவர்களுக்கு புதிய வாழ்வைத் தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

தங்கள் சொல்லாலும், செயலாலும் உம்முடைய சாட்சிகளாக வாழ்ந்து திருஅவையின் வளர்ச்சிக்கு உதவிட அருள் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4. பகிர்தலின் இறைவா, செல்வந்தர்கள் அனைவருக்காகவும் வேண்டுகின்றோம். அவர்கள் ஏழை எளியவர்கள் மீது இரக்கம் கொண்டு தங்களிடம் இருப்பதை அவர்களோடு பகிர்ந்து கொண்டு அவர்களையும் மனித மாண்போடு வாழச் செய்யும் முயற்சிகளை எடுத்தருள தேவையான அருள் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் பதினெட்டாம் ஞாயிறு (04-08-2024)**

**விப 16: 2-4,12-15 எபே 4: 17,20-24 யோவா 6: 24-35**

**திருப்பலி முன்னுரை**

இறைவன் கொடுத்திருக்கின்ற இப்புதிய மாதத்திற்காக நன்றி கூறுவோம். அருளடையாளங்கள் அனைத்தும் ஆண்டவரின் பாதுகாப்பையும் அக்கறையையும் உணர்த்துகின்றது. இடைவிடா கவனிப்பு, இடைவிடா இரக்கம், இடைவிடா பொறுமை கடவுள் மட்டுமே காட்டமுடியும். ஆனால் சில வேளைகளில் இஸ்ராயேல் மக்களைப் போல கடவுளுக்கு எதிராக முனுமுனுக்கிறோம். அவரின் அற்புதங்கள் கண்டும் அவரைப் பின்பற்றா நிலை சில வேளைகளில் தோன்றுகிறது. என்ன வேலை செஞ்சிட்டீங்க? என்ற குறை கூறும் வழக்கமும், நிராகரிக்கும் பண்பும் களையப்பட வேண்டும் என்பதே இன்றைய இறைவார்த்தை வழிபாடு கொடுக்கும் செய்தி. நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் இராது என்று இறைமகன் இயேசு சொல்லி தனனிடம் நம்பிக்கையோடு வந்த அனைவரின் தாகத்தைப் போக்கினார். இன்று எனது பசி, எனது தாகம் என்ன? அதைத் தணிக்க விரும்புகிறேனா? கலைமான்கள் நீரோடைக்காக ஏங்கித் தவிப்பதுபோல உயிருள்ள இறைவன் மேல் தாகம் கொள்வோம். அவர் நம் தாகம் தணிப்பார். புது வாழ்வு அளிப்பார். நம்முகமும் உறவும் புதுப்பொழிவு பெறும். அதற்கான மாற்றங்களைக் கொண்டுவர இப்புனித பலியில் சிரம் தாழ்த்தி இறையருள் பெறுவோம்.

**முதல்வாசக முன்னுரை**

கடவுள் தாமாகவே முன்வந்து அடிமைத்தளைகளைக் களைந்து விடுதலையை இஸ்ராயேல் மக்களுக்கு வழங்குகின்றார். செங்கடல் முதல் சீனாய் மலைவரை மட்டுமல்லாமல் அவரின் வல்லமை இஸ்ராயேல் மக்களை விட்டு பிரியவில்லை என்பது கடவுள் தம் மக்களின் மன்றாட்டுகளுக்கு செவிகொடுக்கின்றார் என்பது தெளிவாகிறது. அத்தகைய இறைவனுக்கு





3) சிம்சோன் கையால் தம்மைப் பிடித்திருந்த.............இவ்வீட்டைத் தாங்கி நிற்கும் தூண்களை நான் தொடுமாறு அங்கு என்னை இட்டுச்செல்: நான் அவற்றின்மீது சாய்ந்து நிற்பேன்' என்றார்.

6) அம்மோனியரின் ......... தனக்கு இப்தா சொல்லி அனுப்பிய வார்த்தைகளை ஏற்கவில்லை.

7) செபாகும் சல்முன்னாவும், 'நீயே எழுந்து எங்களைத் தாக்கு. ஆளைப்போன்றே அவனது ஆற்றல்' என்றனர். கிதியோன் எழுந்து செபாகையும் சல்முன்னாவையும் ............

10) இஸ்ரயேலருக்கு எதிராக ஆண்டவரின்............. மூண்டது. அவர் அவர்களை மெசப்பொத்தாமியா மன்னன் கூசான் ரிசத்தாயிமிடம் ஒப்படைத்து விட்டார்.

11) காலேபு, கிரியத்து சேபேரைத் தாக்கிக் கைப்பற்றுபவருக்கு என் மகள் அக்சாவை மனைவியாக ............. என்றார்.

**மேலிருந்து கீழ்**

3) மீக்கா அவரிடம், 'என்னுடன் தங்கும்: எனக்குத் தந்தையாகவும் குருவாகவும் .......... நான் உமக்கு ஆண்டொன்றுக்குப் பத்து வெள்ளிக் காசுகளும் உடையும் உணவும் தருவேன்' என்றார்.

4) அவர் தேனடையைக் கையில் எடுத்து அருந்திக் கொண்டே தொடர்ந்து நடந்தார்: தம் தந்தை தாயிடம் சென்று அவர்களுக்கும் கொடுத்தார்............... அருந்தினர்.

7) ஒபிராவிலிருந்த தன்தந்தை வீட்டுக்கு வந்து எருபாகாலின் மக்களும் தன் சகோதரர்களுமாகிய எழுபது பேரை ஒரே கல் மீது வைத்துக் கொன்றான். எருபாகாலின் கடைசி மகன் யோத்தாம் மட்டும் ஒளிந்து ................ தப்பித்துக்கொண்டான்.

8) ............ முந்நூறு பேரும் எக்காளம் ஊதினர். ஆண்டவர் பாளையம் முழுவதிலும் ஒவ்வொருவனும் மற்றவன்மீது வாள்வீசச் செய்தார்.

11) ஆகவே இப்பொழுது கூறுகின்றேன்: நான் அவர்களை உங்கள் முன்னிலையிலிருந்து துரத்திவிடமாட்டேன்............... உங்களுக்கு முன்னாக இருப்பார்கள். அவர்கள் தெய்வங்கள் உங்களுக்குக் கண்ணியாக இருப்பார்கள்'.

**கீழிருந்து மேல்**

1) ................ நாள் இஸ்ரயேல் மக்கள் பென்யமின் மக்களை நெருங்கினர்.

2) தாண் மக்கள் தங்கள் குலத்தாருள் ஆற்றல் வாய்ந்த அனைவரிலிருந்தும், சோராவையும் எசுத்தாவோலையும் சார்ந்த ஐந்து போர்வீரர்களை, நாட்டை உளவு பார்க்கவும் வேவு பார்க்கவும் ..............

5) இப்தா ஆறு ஆண்டுகள் இஸ்ரயேலில் நீதித் தலைவராக விளங்கினார். கிலயாதைச் சார்ந்த இப்தா ............ கிலயாதின் நகர் ஒன்றில் அடக்கம் செய்யப்பட்டார்.

6) அபிமெலக்கிற்குப் பின் இஸ்ரயேலை விடுவிக்கத் தோதுவின் புதல்வன் பூவாவின் மகனான தோலா எழுந்தார். அவர் இசக்கார் குலத்தைச் சார்ந்தவர். அவர் எப்ராயிம் .......... சாமீரில் வாழ்ந்து வந்தார்.

9) ஏகூது ..........., இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரின் பார்வையில் தீயதெனப்பட்டதை மீண்டும் செய்தனர்.

10) மிதியானியரிடம் மிகவும் ...... இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரை நோக்கிக் கூக்குரலிட்டனர்.

12) ஆண்டவர் செக்கேமின் மக்கள் செய்த எல்லாத் தீய செயலுக்குரிய தண்டனையையும் அவர்கள் ............... விழச்செய்தார்.

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-07-2024

# போற்றுதலுக்கு உரிய அன்னை

14

கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி



கால்பந்து ஆட்டக் காரனின் காலணி
கோடி கோடியாம் விலை
கேவலம் அழகியின் ஆடைகள் ஆபரணங்கள்
சொல்ல முடியா விலை
புழுக்கள் அண்டிடும் கல்லறைக் கூட
புனிதம் என்றொரு நிலை
காகிதம் ஆயினும் பணமாம் ஆதலின்
மதிப்பே வேறொரு நிலை
போற்றத் தகுந்த பொருளா? இல்லையோ?
மாற்றம் கொண்டவர் இவர்
போற்ற மிகுந்த பேழையாம் அன்னையை
சாற்ற இடறேது உள?
இறையவர் தூதரால் புகழப் பெற்றவர்
இறையடி தனையே அளிக்கப் பெற்றவர்
இறையையே கருவினில் சுமக்கப் பெற்றவர்
இறைவனின் திருவுளம் நிகழ்த்தப் பெற்றவர்
ஆவியின் அருளால் நிரப்பப் பெற்றவர்
ஆண்டவரே அம்மாவென்று அழைக்கப் பெற்றவர்
உறவினர் அன்னையால் ஆசீர் பெற்றவர்
உறவிலா அனைவராலும் மதிக்கப் பெற்றவர்
பேராண்மை பூண்ட தாவீதை விடவும்
பேரறிவு வாய்ந்த சாலமோன் விடவும்
ஆபிரகாம் யாக்கோபு மோசேவை விடவும்
ஆயிரம் மடங்கு ஆசீர் பெற்றவர்
எலியா எலிசா இறைவாக்கினர் விடவும்
பேதுரு பவுல் மறைத்தூதர் விடவும்
திருமுழுக்கு யோவான் மறைசாட்சி விடவும்
பலநூறு மடங்கு தேர்வுப் பெற்றவர்
பெண்களுள் சிறந்தவர் இவரினும் இலர்
கண்களும் கண்டதோர் அழகியும் இலர்
போற்றுதற் குரிய அன்னையே இவர்
பொற்பாதம் பணிந்திட தடையாவர் உளர்?





பக்தியும் பறந்துவிடும். உணவு உயிர் தருகிறது, உறவை வளர்க்கிறது. உணவை பிரித்து தனித்தனியாக அரிசியாக உண்ணமுடியாது. ஒன்றாக கலந்து, குழைத்து சமைத்துதான் உணவாகி நம்பசியாற்றும். அதேபோல், நாமும் பிளவுபடாமல் பகிர்தல்மூலம் வாழ்வின், சமுதாயத்தின் சுவை கூட்டுவோம். அதற்கு உதவிடும், உரமிடும் அன்பு வாழ்க்கை, நீதி வாழ்க்கை, சமாதான வாழ்க்கை, மனமிரங்கும் வாழ்க்கையை கடைபிடிக்க உறுதிபூண்டவர்களாக இக்கல்வாரி பலியில் கலந்து உடல் ஆன்ம நிறைவு பெற்றிடுவோம்.

**முதல்வாசக முன்னுரை**

இறைகொடையை இறைவாக்கினர் எலியா, அவருக்கு பின் வந்த எலிசா பெற்று கொண்டதையும் இவ்வாற்றலினால் பசித்தோருக்கு உணவளிக்கும் புதுமையை நிகழ்த்துகிறார் இறைவாக்கினர் எலிசா என்பதையும் சுட்டிக்காட்டி நம்மில் இருப்பதை பிறரோடு பகிர்ந்துகொள்ளும் போது அவர்கள் இறைவனின் சிறப்பு கரத்தை உணரமுடியும் என சுட்டிக்காட்டும் இவ்வாசகத்தினை கவனமுடன் கேட்போம்.

**இரண்டாம் வாசகம்**

ஒற்றுமையே உயர்வு. ஏற்றத்தாழ்வு நமக்கு வீழ்வே. ஆம் புனித பவுலடிகளார் தன் இறை அனுபவம் மூலம் இறைவன் நம்மில் வாழ்கின்றார் எனக் கூறி அன்பு,நன்னடத்தை,பொறுமை , விசுவாசம் நம்மில் அதிகம் புழங்கப்படவும் அழைக்கின்றார். கிறிஸ்தவ புது சமுதாய ஆணிவேரும் இதுதானே! இறை மதிப்பீடுகள் நம்மில் வளர்ந்திட கேட்போம் இவ்விரண்டாம் வாசகத்தினை.

**மன்றாட்டுக்கள்**

1. திரு அவையின் இறைவா, உமது திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் தங்களுக்கென வாழாமல் தங்களை திருப்பணிக்காக அழைத்த உமக்காகவே வாழ்ந்து தங்கள் பணியை சுயநலமின்றி செய்து நல்ல இறை பணியாளர்களாக வாழ வரம் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, எங்கள் நாட்டை ஆளுகின்ற தலைவர்களை ஆசீர்வதியும். அவர்கள் ஏழை எளிய மக்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு சமுதாய நலனுக்காகவும், நாட்டின் வளர்ச்சிக்காகவும் உழைத்திட வரம்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. நன்மையின் இறைவா, உமது புனித திருஅவையில் வாழும் அனைத்து இறைமக்களுக்காகவும் வேண்டுகின்றோம். அவர்கள் தாங்கள் வாழுகின்ற இடத்திலும், பணிசெய்கின்ற இடத்திலும் கிறிஸ்தவ மதிப்பீடுகளை வாழ்வாக்கி,

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, நீர் உருவாக்கிய திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் கிறிஸ்தவ மதிப்பீடுகளை வாழ்வாக்கி, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்கள் ஒற்றுமையோடும், கிறிஸ்துவின் போதனைக்கும் ஏற்றபடி வாழ அவர்களை நல்வழியில் நடத்திட தேவையான வரம்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2. கலங்கரை விளக்கான இறைவா, வாழ்வில் பல்வேறு இழப்புகளைச் சந்தித்து வாழ வழிதெரியாமல், திக்கற்றவர்களாக நிற்கும் அனைவருக்காகவும் உம்மை வேண்டுகின்றோம். அவர்களுக்கு நீர்தாமே நல்ல வழிகாட்டியாக இருந்து அவர்கள் மீண்டும் புத்துணர்வோடு புதிய வாழ்வு வாழும் அருள் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆறுதலின் இறைவா, கொரோனா பெருந்தொற்றினால் பாதிப்படைந்த குடும்பங்களுக்காக உம்மை வேண்டுகின்றோம். இத்தொற்றினால் உறவினர்களை இழந்து தவிக்கும் அனைவருக்கும் நீர்தாமே ஆறுதலாக இருந்து அந்த இழப்பைத் தாங்கிக் கொள்ளத் தேவையான மனதைரியத்தையும், வலிமையையும் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4. இரக்கத்தின இறைவா, பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டு மரித்த அனைத்து ஆன்மாக்களுக்காகவும் உம்மை வேண்டுகின்றோம். அவர்கள் மீது இரக்கம் கொண்டு அவர்களின் மண்ணக பாவங்களை மன்னித்து முடிவில்லா பேரின்ப வாழ்வைத் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் பதினேழாம் ஞாயிறு (28-07-2024)**

**2 அர 4: 42-44 எபே 4: 1-6 யோவா 6: 1-15**

**திருப்பலி முன்னுரை**

பழையஏற்பாட்டில் இறைவன் இஸ்ராயேல் மக்களுக்கு மன்னாவை அளித்து அவர்களின் பசியைப் போக்கினார். அவரின் அன்பு மகன் இயேசுவும் தாயுள்ளம் கொண்டவராக பிள்ளைகளின் தேவை உணர்ந்து உணவளித்து பராமரித்ததை இன்றைய திருவழிபாட்டில் தியானிக்கின்றோம். இயேசுவின் தாயும் தந்தையும் அவரை தீவனத்தொட்டியில் கிடத்தினார்கள் என்பதை லூக்கா நற்செய்தியில் வாசிக்கின்றோம். இந்நிகழ்வு இயேசு பசிபோக்கும் மருந்தாக இருப்பதை உணர்த்துகிறது. பசி வந்தால் பத்தும் பறந்துவிடும்,





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்



அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.

**பொதுக்காலம் பதினைந்தாம் ஞாயிறு (14-07-2024)**

**ஆமோ 7: 12-15 எபே 1: 3-14 மாற் 6: 7-13**

**திருப்பலி முன்னுரை**

உடலும் மனமும் நன்றாக இருத்தல் அனைவரின் ஆசை. வாழ்வும் அழைத்தலும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பது இறைவனின் ஆசை. அனுப்பப்பட்டவர்களின் தாரக மந்திரம் மனந்திரும்புங்கள் நற்செய்தியை நம்புங்கள். வாழ்வில் வெற்றிடம், குறுக்கீடு வரும்போது நம்மை அறியாமலே மனந்திரும்பலும், நம்பிக்கையோடு நிமிர்ந்து நின்றலும் வாழ்வின் யதார்த்தங்கள். உண்மை என்னவெனில் எல்லாச் சூழ்நிலையிலும் பின்வாங்கா இறைவாழ்வு, நற்செய்தி வாழ்வு அமைய வேண்டும். திருமுழுக்கு பெற்ற அனைவருமே இயேசுவின் சீடர்களே. நற்செய்தி அறிவிப்பது மதமாற்றத்தை முதன்மைப்படுத்துவது அல்ல. மாறாக, மனமாற்றத்தை முதன்மைப்படுத்த வேண்டும். மனமாற்றத்தின் அடிப்படை நம் தனிப்பட்ட இறை அனுபவமே. எவ்வித எதிர்பார்ப்புமின்றி இறைத்துணை ஒன்றே நம் வலிமை என்று ஏற்கும்போது நற்செய்தியை பறைசாற்ற முடியும். பேய்களை, நோய்களை அதிகாரத்துடன் விரட்டி குணப்படுத்த முடியும். இது வியப்போ, புதிதோ அல்ல. மாறாக, சீடத்துவ குணம். இக்குணத்தோடு வாழ வரம் வேண்டி சிரம் தாழ்த்தி வலிமை பெறுவோம் இப்புனித பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

இறைவாக்கினர் ஆமோசுக்கும், அர்ச்சகராகிய அமாசியாவுக்கும் உள்ள உரையாடல் இன்றைய முதல் வாசகம். வலிமையுள்ள இறைவார்த்தை வாழ்வளிக்கும். அதை உணராதவர்கள் வாழ்வின் முழுமை அடைவதில்லை. இறைவனுக்கு செவிமடுத்து நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவிகொடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

அனைத்தையும் படைத்த கடவுள் அவற்றை நல்லதெனக் கண்டார். யூதர்கள், புறவினத்தார்கள் என தனித்தனியே பிரிந்து வாழும் அவலநிலை அகன்று ஒற்றுமையுடன் குறிப்பாக ஏற்றதாழ்வுகள், இருப்பவன் இல்லாதவன் என்ற சீர்கேடுகள் மறைந்து கிறிஸ்துவில் வாழவேண்டும் என்று கூறி எபேசிய

மக்களை அழைத்த அதே பவுலடிகளார் இன்று நம்மையும் அழைக்கிறார். வேறுபாடின்றி வாழமுன்வரும் அடையாளமாக இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. எல்லாம் வல்ல இறைவா, புனித திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மக்களை நேரிய வழியில் நடத்தி இறையாட்சியைக் கட்டியெழுப்பும் பணியை திறம்படச் செய்ய தேவையான அருள் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, கிறிஸ்தவர்களாகிய நாங்கள் எவ்வித வேறுபாடுமின்றி ஒரே மனநிலையுடனும் எண்ணத்துடனும், செயல்பாட்டுடனும் வாழந்து உண்மைக் கிறிஸ்தவர்களாக உமக்கு சாட்சி பகர்ந்து வாழத் தேவையான வரம் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. வார்த்தையான இறைவா, உம்முடைய வார்த்தை வாழ்வளிக்கும் அருமருந்து என்பதை உணர்ந்து நாங்கள் எங்கள் வாழ்வில் இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து தினமும் இறைவார்த்தையை வாசித்து தியானித்து வாழ்வாக்குகின்ற மக்களாகத் திகழ அருள் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4. ஞானத்தின் இறைவா, எங்கள் குடும்பங்களில் இருக்கும் அனைத்துக் குழந்தைகளுக்காகவும் உம்மை மன்றாடுகின்றோம். தூய ஆவியின் வல்லமையால் அவர்களை நிரப்பி அவர்கள் அனைவரும் ஞானத்தோடும், ஒழுக்கத்தோடும், தெய்வ பயத்தோடும் வளர அருள் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் பதினாறாம் ஞாயிறு (21-07-2024)**

**எரே 23: 1-6 எபே 2: 13-18 மாற் 6: 30-34**

**திருப்பலி முன்னுரை**

எனக்காக யார் இருக்கார்? எனக்காக யார் பரிந்து பேசுவார்? என அன்புக்கும் அடைக்கலத்திற்கும் வழிதேடும் மனங்களுக்கு ஆண்டவர் அணைத்து ஏற்பவராக இருக்கிறார் என்ற மையக்கருத்தை இன்றைய இறைவார்த்தை வழிபாடு முன்வைக்கின்றது. இயேசுவின் கூட்டம் ஏழைகளின் கூட்டம், பட்டினிகிடந்த கூட்டம், குணம்பெற காத்திருக்கும் கூட்டம். நானே வாழ்வுதரும் உணவு என்று நற்கருணையாக அனைவரையும் ஒன்று சேர்க்கின்றார், ஒன்றாக இருக்க அழைப்பும் விடுக்கின்றார். சுயநலனோடு வாழும்போது எனக்காக யார்? என்ற கேள்வியும் தனிமையும் வாட்டும். ஆனால் உனக்காக, உங்களுக்காக நான் என்று உணரும்போது கைவிடப்பட்ட நிலை, சோர்ந்த நிலை, வலுவிழந்த நிலை மறைவதை இயேசு முன்வைக்கிறார். தனக்காக மரம் கனிகளை தாங்குவதில்லை மாறாக மற்றவருக்கு அள்ளித்தருகின்றதே ! நம்மை சுற்றி வாழும் இதயங்களுக்கு இயேசுவின் இதயங்களாக நாம் மனமிரங்குவோம். இதன்மூலம் இறை அருளிலும் ஆன்மீகத்திலும் ஆழம் பெற்றிட பக்தியோடு இக்கல்வாரி பலியில் செபிப்போம்.

**முதல் வாசக முன்னுரை**

வெயிலுக்கு நிழல் தேடும் பறவைபோல ஆயனில்லா ஆடுகளுக்கு நல்லாயனாக சர்வத்தையும் படைத்த இறைவன் தன்னை வெளிபடுத்துகின்றார். இஸ்ராயேல் மக்களுக்கு ஆடுவளர்க்கும் தொழில் முதன்மையானது. ஆடுகளை பாதுகாத்து வழிநடத்தும் முறைகள் தெரிந்தும் தவறவிட்ட நிலை தொலைந்த நிலையில் தலைவர்களின் வாழ்க்கை அமைந்ததால் கடவுள் முன்வந்து காக்கும், மீட்கும், வழிநடத்தும் தன்மையில் கலங்கவேண்டாம், நம்பிக்கை இழக்க வேண்டாம் என நம பக்கம் வருகின்றார். இறைவன்மீதுள்ள நம்பிக்கையை வளர்த்திட இவ்வாசகத்தினைக் கேட்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

கிறிஸ்துவின் வழியாக ஏற்றத் தாழ்வுகள் ஓரங்கட்டப்பட்டது. எனவே அனைவரும் சமம். நற்செயல்களால் நம்மை நாமே உயர்த்திக் கொள்ளவும் தேவையற்ற விவாதங்கள், குழப்பங்கள் களைந்து சமாதானத்துடன் வாழவும், கங்கணம், இழிவுகள் அகற்றி புதுமனுக்குலம் அமைக்க புதுசிந்தனை ஏற்க இவ்வாசகத்தைக் கேட்போம்.